மாண்புமிகு பேரவைத் தலைவர் : மூலக் கேள்வியை ஒட்டித்தான் உறுப்பினர்களுடைய துணைக் கேள்வி அமையவேண்டும்.

கீழ்பருத்திக்குடி பஞ்சாயத்துப் பிரிவு.

*466 வினு.—**திரு. எஸ். சிவசுப்பிரமணியன் :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சிதம்பரம் தாலுகா, குமராட்சி யூனியனைச் சேர்ந்த கீழ்ப் பருத்திக்குடிப் பஞ்சாயத்திலிருந்து மேலப் பருத்திக்குடிப் பஞ்சாயத்து பிரிந்து இரண்டு வருடமாகியும் இப் பஞ்சாயத்துக்களுக்குச் சொந்தமான சொத்துக்கள் பிரிக்கப்படாமல் இருப்பதின் காரணம் என்ன ?

(இ) இதுகுறித்து அரசாங்கம் எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி :

(அ) & (இ) : கீழ்ப் பருத்திக்குடி, மேல் பருத்திக்குடி ஊராட்சி மன்றங்களுக்கிடையே சொத்துக்களைப் பிரிப்பதுகுறித்து ஏற்கெனவே தென் ஆற்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் தனது 19—2—1968 தேதியிட்ட நடவடிக்கைகளில் ஆணை பிறப்பித்துள்ளார்.

Employees in film trade.

*467 *Q.*—THIRU N. S. V. CHITHAN : **Will the Hon. the Minister for Labour be pleased to state whether the Government are aware that large number of persons employed in film trade are keeping idle consequent on the stoppage of production in this State ?**

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இல்லை.

திரு. என். எஸ். வி. சித்தன் : திரைப்படத் தயாரிப்புத் தொழிலில் சென்ற ஆண்டு பணிபுரிந்தவர்களில் எத்தனை பேர்கள் இந்த ஆண்டு பணி புரிகிறுர்கள் ? எத்தனை பேர்கள் பணிபுரியவில்லை என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அதைப்பற்றி என்னிடம் விவரம் இல்லை. தனிக் கேள்வி போட்டால் சொல்லலாம்.

திரு. என். எஸ். வி. சித்தன் : ஆன் எ பாயிண்டு ஆப் ஆர்டர், ஸார் எத்தனை தொழிலாளர்கள் வேலையில் இருக்கிறுர்கள் என்ற விவரம் இல்லாமல், அமைச்சர் அவர்கள் யாரும் வேலையில்லாமல் நீக்கப் படவில்லை என்ற தகவல் எப்படிக் கொடுக்கமுடியும்.?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : அங்கத்தினர் கேட்டது திரைப் படத் தொழிலில் திரைப்படத் தயாரிப்பு நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து அத்தொழிலில் ஈடுபட்டுள்ள பெருவாரியான நபர்கள் வேலையின்றி இருக் கிறுர்கள் என்பது அரசுக்குத் தெரியுமா என்று கேட்டார்கள். நான் இல்லை என்று பதில் சொன்னேன். மொத்தமாக ஸ்டுடியோவில் எவ்வளவு பேர்கள் இருக்கிறுர்கள் என்ற கேள்வியையும் அங்கத்தினர் கேட்கவில்லை. அதற்கான பதிலும் இங்கு இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியிலிருந்து அந்தக் கேள்விக்கும் விடை வந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்க முடியாது.